செ.வெ.எண்:06 நாள்:02.02.2018

# அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றிய பகுதியில் பள்ளி மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியத்திற்குட்பட்ட வெத்தியார்வெட்டு அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி மற்றும் வெத்தியார்வெட்டு, விளப்பள்ளம் ஆரம்ப சுகாதார நிலையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (02.02.2018) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

வெத்தியார்வெட்டு அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியை பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள், 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளிடம் பொது தேர்வுகளை எழுதுவதற்கு இப்பொழுதிலிருந்தே தங்களை தயார்படுத்தி கொள்ள வேண்டும். கையெழுத்து பயிற்சி மற்றும் மனப்பாடம் செய்யும் திறன்களை வளர்த்து கொள்ள வேண்டும். தினசரி நாளிதழ்களை தினந்தோறும் படிக்கும் முறைகளை பள்ளி பருவத்திலேயே வளர்த்து கொண்டு பொது அறிவு மற்றும் அறிவியல் சார்ந்த கட்டுரைகளை பயின்று பொது அறிவு திறன்களை வளர்த்து கொள்ள வேண்டும். நல்லொழுக்கங்களை மாணவர்கள் கடைபிடித்திட அறிவுருத்தினார்கள்.

மேலும், வெத்தியார்வெட்டு மற்றும் விளப்பள்ளம் கிராமத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள் மாதம் தோறும் பரிசோதனைக்கு வரும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சரிவிகித உணவு முறைகள் மற்றும் ஊட்டச்சத்துகளை பெருக்கி கொள்வதற்கான இயற்கை உணவுமுறைகளை பின்பற்றிட மருத்துவர்கள் கர்ப்பிணி பெண்களுக்கு அறிவுருத்திட வேண்டுமென அறிவுருத்தினார்கள். மருத்துவர்கள் கிராமப்புறங்களிலிருந்து வரும் பொதுமக்களிடம் கனிவாகபேசி அதற்குண்டான சிகிச்சை முறைகளை மேற்கொள்ள வேண்டும். மருத்துவமனை வளாகம் எப்பொழுதும் தூய்மையாக பராமரித்திட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் இவ்வாய்வின்போது தெரிவித்தார்கள்.

இந்தஆய்வின்போது, வட்டார மருத்துவ அலுவலர் மரு.லெட்சுமிதரன், பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**